சென்னை பெருநகர காவல்துறை

முத்துவும் முப்பது திருடர்களும்

சைபர் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு கையேடு

சென்னை பெருநகர காவல்துறை வழங்கும்

முத்துவும் முப்பது திருடர்களும்...

அணிந்துரை

நாளுக்கு நாள் விரிவடைந்து வரும் இணைய வெளியானது மனித குலத்திற்கு பல்வேறு நன்மைகளையும் அதற்கு இணையான சவால்களையும் அளித்துக் கொண்டே இருக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சியால் இணையவழி குற்றங்களும் பெருகி வருகின்றன. பொதுமக்களின் பணத்தை குறிவைத்து பெரும்பான்மையான சைபர் குற்றங்கள் நடைபெறுகின்றன. வரன்முறை இன்றி மக்களின் மீது தொடுக்கப்படும் சைபர் குற்றங்களை எதிர்த்து போராட விழிப்புணர்வு என்னும் ஆயுதம் தேவைப்படுகிறது.

முத்துவும் முப்பது திருடர்களும் என்ற இப்புத்தகம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. மக்களை ஏமாற்ற சைபர் குற்றவாளிகள் கையாளும் முப்பது வழிமுறைகள் குறித்தும் அதிலிருந்து தற்காத்துக் கொள்ளும் நடைமுறைகள் குறித்தும் இப்புத்தகத்தில் விளக்கப்படங்களுடன் எளிய முறையில் புரிந்துக்கொள்ளும் வகையில் விவரிக்கப்பட்டுள்ளது. அனைத்து தரப்பு மக்களின் சைபர் குற்றங்கள் குறித்த சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் வகையில் இப்புத்தகம் அமைந்துள்ளது.

முத்துவும் முப்பது திருடர்களும் என்ற இந்த புத்தகம் தமிழ் பேசும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி சைபர் குற்ற விழிப்புணர்வு மிகை மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதில் மிகச்சிறந்த பங்காற்றும் என்று சென்னை பெருநகர காவல்துறை உளமார உறுதி கொள்கிறது.

– சென்னை பெருநகர காவல்

பொருளடக்கம்

வ.எண்.	குற்றச் செயல் முறைகள்	ப. எண்
1.	URL இணைப்பு மூலமாக மோசடி (Link Scam)	01
2.	மின் கட்டண மோசடி (EB Bill Fraud)	03
3.	பான்/ ஆதார்/ கேஒய்சி (KYC) புதுப்பித்தல் மோசடி (ரிமோட் கண்ட்ரோல் செயலி வாயிலாக)	05
4.	கடன் செயலிகள் மூலம் மோசடி (Loan Application Fraud)	07
5.	அதிகாரி போல் ஆள்மாறாட்டம் செய்து மோசடி (Boss scam)	09
6.	சிம்கார்டு துண்டிப்பு மோசடி (Sim Blocking Fraud)	11
7.	அமேசான் பிளிப்கார்ட் பகுதி நேரம் வேலை மோசடி (Part time job offer)	13
8.	வீடியோ கால் அழைப்பு மூலம் பணம் பறிப்பு மோசடி (Sextortion)	15
9.	கிரிப்டோகரன்சியில் முதலீடு மோசடி (Investment through Cryptocurrency)	17
10.	வெளிநாட்டிற்கு ஆயில் மற்றும் கொட்டைகள் ஏற்றுமதி மோசடி (Oil and Seeds Export Fraud)	19
11.	இணையதள சந்தை மோசடி (Online - OLX Market Scam)	21
12.	சிம் ஸ்வாப்/ சிம் குளோனிங் மோசடி (Sim swap/Sim cloning)	23
13.	QR குறியீடு ஸ்கேன் மோசடி (QR Code Scam)	25
14.	இணையதள வேலை வாய்ப்பு மோசடி (Online Job Offer Fraud)	27
15.	வீடு வாடகைக்கு விடும் வலைதளங்களின் மூலம் மோசடி (Fraud using House Rent Application)	29

பொருளடக்கம்

வ.எண்.	குற்றச் செயல் முறைகள்	ப. எண்
16.	தீங்கிழைக்கும் செயலியைப் பயன்படுத்தி மோசடிநிறுவனங்களின் இமெயில் சமரசம் மூலம் (Business Email compromise (BEC) மோசடி	31
17.	பரிசு தருவதாக கூறி மோசடி (Gift Scam)	33
18.	திருமண வரன் வலைத்தளம் வாயிலாக மோசடி (Matrimony Fraud)	35
19	இணைய வழி பங்கு சந்தை முதலீடு மோசடி (Online Stock Investment Scam)	37
20	மல்டி-லெவல் மார்க்கெட்டிங் (MLM) மோசடிகள்	39
21.	சமூக ஊடகங்கள் மூலம் ஆள்மாறாட்டம் (Impersonation through Social Media)	41
22.	இணையதள லாட்டரி மோசடி (Online Lottery Fraud)	43
23.	வெளிநாட்டு தொண்டு நிறுவன நிதி வழங்கல் தொடர்பான மோசடி	45
24.	கடன் அட்டை வரம்பு மேம்படுத்துதல் மோசடி (Credit Limit Upgradation Fraud)	47
25.	பணம் திரும்ப பெறும்கேஷ்பேக் சலுகை மோசடி (Online Fraud using cashback offers)	49
26.	சமூக வலைதளங்களில் வதந்திகளை பரப்புதல் (Spreading False News in Social Media)	51
27.	தரவு திருட்டு (Data Theft)	53
28.	தேடுபொறிகளில் தகவல்களை மாற்றியமைத்து மோசடி (Frauds by compromising credentials through search engines)	55
29.	அங்கீகரிக்கப்படாத கடன் செயலிகள் (Unauthorized Loan Application)	57
30.	தவறான QR குறியீடு மூலம் வியாபார கடைகளில் மோசடி (Payment Spoofing Applications)	59

1. URL இணைப்பு மூலமாக மோசடி URL (Link Scam)

ஒரு நாள், முத்துவின் மொபைலுக்கு ஒரு மெசேஜ் வந்தது: 'அன்புள்ள வாடிக்கையாளரே, உங்கள் KYC விவரங்களை இரண்டு நாட்களுக்குள் புதுப்பிக்கவில்லை என்றால், உங்கள் வங்கி கணக்கு முடக்கப்படும். விவரங்களைப் புதுப்பிக்க கீழே உள்ள இணைப்பை பயன்படுத்தவும் http://updatekycxyzbank.com/

முத்து இணைப்பைக் கிளிக் செய்தார், ஆனால் KYC விவரங்களைப் புதுப்பிக்கும் இணைப்பு வேலை செய்யவில்லை. விரைவில், அவருக்கு போன் அழைப்பு வருகிறது

செய்ய வேண்டியவை:

1. KYCஐப் புதுப்பிக்கக் கோரும் அறியப்படாத நம்பர்களிலிருந்து அழைப்புகள் (அல்லது) SMS கோடுகளிலிருந்து, லிங்க் அல்லது SMSகளைப் பெறும்போது, உங்கள் வங்கி கிளையில் KYC நிலையை எப்போதும் சரிபார்க்கவும்.

2. இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, முத்துவின் மொபைலுக்கு தனது வங்கி கணக்கில் இருந்து ரூ. 50,000 எடுக்கப்பட்டதாக எஸ்எம்எஸ் வந்தது.

முத்து உடனே போனில் பேசிய அந்த நபர்க்கு போன் செய்தார், ஆனால் அவர் அழைப்புகளுக்கு பதிலளிக்கவில்லை. அந்த நபர் ஒரு ஏமாற்றுக்காரர் என்பதையும், அவருடன் தனிப்பட்ட விவரங்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடாது என்பதையும் முத்து உணர்ந்தார்.

செய்யக்கூடாதவை:

1. தொலைபேசி/மின்னஞ்சலில் வரும் தெரியாத லிங்க்களை சரிபார்க்காமல் கிளிக் செய்ய வேண்டாம்.

2. உங்கள் ரகசிய விவரங்களை அந்நியர்களுடன் பகிர்ந்து கொள்ளாதீர்கள்.

2. மின் கட்டண மோசடி (EB Bill Fraud)

செய்ய வேண்டியவை:

1. EB bill கட்ட வேண்டும், சிம் கார்டு ஆக்டிவேட் செய்தல், PAN, ஆதார் அப்டேட் பண்ண சொல்லி மெசேஜ் வந்தால் அதை புறக்கணிக்கவும்.

2. இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.

மோசடி நபர் முத்துவின் போனுக்கு வரும் அனைத்து தகவலையும் Any desk ஆப் மூலம் பார்க்கிறார்.

OTP விவரங்களை அறிந்து, முத்துவின் வங்கி கணக்கிலுள்ள மொத்த பணத்தையும் எடுத்து விட்டார்.

சில நிமிடங்களுக்கு பிறகு முத்துவிற்கு மெசேஜ் வந்தது. உங்கள் கணக்கிலிருந்து ரூ.5,00,000 டெபிட் செய்யப்படுகிறது.

முத்து உடனடியாக அருகிலுள்ள XYZ கிளைக்குச் சென்று பரிவர்த்தனை பற்றி விசாரித்தார். அழைப்பு ஒரு மோசடிக்காரரிடமிருந்து வந்துள்ளது என்பதை முத்து உணர்ந்தார்.

செய்யக்கூடாதவை:

1. பிளேஸ்டோரில் App download செய்ய சொல்பவர்களை நம்ப வேண்டாம்.

2. டிஜிட்டல் உலகில் அந்நியர்களை எளிதில் நம்பாதீர்கள், மேலும் தெரியாத எண்களில் இருந்து வரும் அழைப்புகளுக்கு பதிலளிக்கும் போது எச்சரிக்கையாக இருங்கள்.

3. பான், ஆதார், கே.ஒய்.சி, (KYC) புதுப்பித்தல்
(ரிமோட் கண்ட்ரோல் செயலி வாயிலாக)

முத்து அந்த நபர் அரசாங்க அலுவலகத்தில் இருந்து தான் பேசுகிறார் என்று நம்புகிறார் புதுப்பிக்க சம்மதிக்கிறார்.

செய்ய வேண்டியவை:

1. **பான்/ ஆதார்/ KYC அப்டேட் தொடர்பாக வரும் அழைப்புகளை சரிபார்க்க வேண்டும்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**



முத்து தான் மோசடி செய்யப்பட்டதை உணருகிறார். மோசடி செய்பவர் ரிமோட் அக்சஸ் அப்ளிகேஷனை டவுன்லோட் செய்ய சொல்லி மோசடி செய்தது அவருக்கு புரிகிறது.

செய்யக்கூடாதவை:

1. **தெரியாத நபர்களிடம் இருந்து வரும் எந்த லிங்கையும் கிளிக் செய்யக்கூடாது.**
2. **எக்காரணத்தைக் கொண்டும் Any desk, Quick support போன்ற ரிமோட் கண்ட்ரோல் ஆப்புகளை டவுன்லோட் செய்ய கூடாது.**

4. கடன் செயலிகள் மூலம் மோசடி (Loan Application Fraud)



செய்ய வேண்டியவை:

1. **அங்கீகரிக்கப்படாத கடன் செயலிகளில் எப்பொழுதும் லோன் வாங்காதீர்கள்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

முத்து கடன் செயலியை டவுன்லோடு செய்யும் போது தனது போனில் உள்ள கான்டாக்ட்ஸ், போட்டோஸ் மற்றும் கேமராவை அணுக அனுமதி கொடுத்திருந்தார்.முத்துவின் நண்பர் சதிஷ், முத்துவை நேரில் சந்தித்து தனக்கு வந்த மார்பிங் போட்டாவை காண்பிக்கிறார்.

லோன் வழங்கும் கம்பெனி முத்துவின் புகைப்படம் மற்றும் அவரது போனிலுள்ள தெரிந்தவர்களின் மொபைல் எண்களை திருடி வைத்து கொண்டு, முத்துவை மிரட்டுகின்றனர்.



தனது புகைப்படம் மார்பிங் செய்யப்பட்டதை கண்டு முத்து பேரதிர்ச்சி அடைகிறார்

முத்துவை லோன் தரும் நிறுவனம் மற்றும் மோசடி நபர்கள் தொடர்ந்து போன் செய்து மிரட்டி கொண்டே இருக்கிறார்கள்.

செய்யக்கூடாதவை:

1. **அங்கீகரிக்கப்படாத கடன் செயலிகளை பதிவிறக்கம் செய்ய கூடாது.**
2. **ஆதார் எண், பான் எண், ரகசிய விவரங்களை தெரியாத நபர்களுடன் பகிர வேண்டாம்.**

5. அதிகாரி போல் ஆள்மாறாட்டம் செய்து மோசடி (Boss Scam)

ஒரு மோசடி நபர் முத்துவிற்கு அவரது அதிகாரி ரமேஷைப் போல ஆள்மாறாட்டம் செய்து, தான் மீட்டிங்கில் இருப்பதாகவும், அவசரமாக அமேசான் கிபிட் கார்ட் ரூ 5000க்கு வாங்கி அனுப்புமாறு வாட்சாப்பில் மெசேஜ் அனுப்புகிறார்.

முத்து அந்த மெசேஜை உண்மை என்று எண்ணி அமேசான் கிப்ட்க்கார்ட்டினை வாங்கி அனுப்பிவிடுகிறார்.



மறுநாள் முத்து தனது சக அலுவலக நண்பரிடம் போனில் இதனை குறித்து தெரிவிக்கிறார்.

செய்ய வேண்டியவை:

1. **பெறப்பட்ட வாட்சாப் மெசேஜின் அடிப்படையில் பணம் செலுத்துவதற்கு முன் சம்பந்தப்பட்ட நபருடன் சரிபார்க்கவும்.**
2. **வாட்சாப்எண்ணை சரிபார்க்கவும்.**
3. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

செய்யக்கூடாதவை:

1. **அதிகாரியோ அல்லது தெரிந்த நபரிடமிருந்தோ பணம் தொடர்பான கோரிக்கைகளைப் பெறும்போது பணம் செலுத்த வேண்டாம்.**

6. சிம்கார்டு துண்டிப்பு மோசடி (Sim Blocking Fraud)

ஒருநாள் முத்துவிற்கு தெரியாத எண்ணில் இருந்து அழைப்பு வந்தது.

செய்ய வேண்டியவை:

1. **OTP இன் நோக்கத்தைப்படிக்க முழு SMS ஐயும் படிக்கவும்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

செய்யக்கூடாதவை:

1. **உங்கள் ஆதார், பான் கார்டு விவரங்கள் மற்றும் OTP ஆகியவற்றை அந்நியர்களுடன் பகிர வேண்டாம்.**
2. **பான்கார்டு அடிப்படையிலான OTP வங்கிக் கணக்குகளில் இருந்து பணம் எடுப்பதுஉட்பட பல்வேறு நிதிச் சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, உங்கள்ஆதார் மற்றும் பான் கார்டுபோன்ற ரகசிய விவரங்களை மோசடி செய்பவர்களிடமிருந்து பாதுகாப்பது மிகவும் முக்கியம்.**

7. அமேசான் பிளிப்கார்ட் பகுதி நேரம் வேலை மோசடி (Part Time Job Offer)

ஒருநாள், முத்துவிற்கு தெரியாத நம்பரிலிருந்து ஒரு எஸ்.எம்.எஸ் வந்தது. அதில் அமேசான் பிளிப்கார்ட் நிறுவனத்தில் பகுதி நேர வேலைவாய்ப்பிற்கு அப்ளை செய்ய ஒரு லிங்க் தரப்பட்டிருந்தது.

செய்ய வேண்டியவை:

1. **ஆன்லைன் பார்ட் டைம் ஜாப் என்று பேசுபவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

"சரி, நான் எதுவும் பணம் கட்ட வேண்டுமா?"

நீங்கள் ஒரு 100 ரூபாய் முதலில் கட்டி பொருள் வாங்கினால் போதும். பின்னர் அந்த பணம் உங்கள் அக்கவுண்ட்டில் வரவு வைக்கப்படும்.

நான் யோசித்து விட்டு பதில் சொல்கிறேன்.

இந்த பார்ட்டைம் ஜாப் மூலமாக லட்சக்கணக்கில் பணம் சம்பாதித்தவர்கள் இருக்கிறார்கள். அந்த வாட்சாப் குரூப்பில் அவர்களிடம் கேட்டு பாருங்கள்.

முத்து அந்த வெப்சைட்டில் பொருளை வாங்கி விற்க ஆரம்பிக்கிறார். முதல் 3 தடவைகள் அவரது வங்கி கணக்கிற்கு பணம் வருகிறது. அதை நம்பி தொடர்ச்சியாக பொருள் வாங்கி வாங்கி அதிலேயே விற்கிறார்.

வெப்சைட்டில் அவரது பெயரில் கமிஷன் பணம் மற்றும் முத்து கட்டிய பணம் என்று 15 லட்சம் காட்டியது. ஆனால் அவரது வங்கி கணக்கிற்கு பணம் வரவில்லை.

முத்து, 15 லட்சம் பணம் உங்கள் அக்கவுண்டிற்கு வர வேண்டுமெனில். நீங்கள் மேலும் 20 லட்சம் மதிப்பிலான பொருளை ஷாப்பிங் செய்ய வேண்டும்.

முத்து, தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தார். சிறிய அளவில் கமிஷன் பணத்திற்கு ஆசைப்பட்டு 15 லட்சத்தை இழந்ததை எண்ணி வருந்தினார்.

செய்யக்கூடாதவை:

1. **எந்த ஒரு வேலைக்காகவும் பணம் கட்ட வேண்டும் என்று கூறினால் பணம் செலுத்த கூடாது.**
2. **கமிஷன் பணம் குறைந்த அளவில் இருக்கும்போது உங்கள் வங்கி கணக்கிற்கு வரவில்லையெனில் மேற்கொண்டு பணம் செலுத்த கூடாது.**

8. வீடியோ கால் அழைப்பு மூலம் பணம் பறிப்பு மோசடி (Sextortion)

முத்துவிற்கு வந்த பேஸ்புக் மெசேஜ்:
என் பெயர் சாந்தி. நான் உங்களுடன் பேச விரும்புகிறேன். உங்களது வாட்ஸ்அப் எண்ணை பகிருங்கள். நாம் நண்பர்களாக பழகலாம்.

ஆஹா!! இது அருமையாக தெரிகிறது. ஒரு பெண் என்னுடன் நட்பு வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறார். போட்டோ பார்க்கவும் அழகாக இருக்கிறது. நாம் நம்முடைய வாட்ஸப் எண்ணை கொடுப்போம்.

வணக்கம். என் பெயர் முத்து. நீங்கள் சாந்தியா? எப்படி இருக்கிறீர்கள்?

முத்து உங்கள் பெயர் அழகாக இருக்கிறது. உங்களோடு பேசுவதில் மிக்க மகிழ்ச்சி. என்னோடு வீடியோ கால் பேச விரும்புகிறீர்களா?

செய்ய வேண்டியவை:

1. **ஃபேஸ்புக்கில் தெரிந்தவர்களிடம் மட்டுமே நட்பு பாராட்ட வேண்டும்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

இதோ உடனே வீடியோ காலில் வருகிறேன்.

அந்தப் மோசடி நபர் வீடியோ கால் அட்டென்ட் செய்தார். வீடியோ காலில் ஒரு ஆபாச போட்டோ தெரிந்தது. கூடவே முத்துவின் முகமும் தெரிந்தது. அதனை கண்டு பயந்து முத்து போனை கட் செய்துவிட்டார்.

சாந்தி என்ன இப்படி ஒரு ஆபாச போட்டோ வந்துவிட்டது?

முத்து நான் உங்களுடைய செல்போனுக்கு ஒரு ஸ்க்ரீன்ஷாட் அனுப்பி வைக்கிறேன். அதில் நீங்கள் ஆபாச படம் பார்ப்பது போல் தெரியும். நீங்கள் எனக்கு பணம் அனுப்பவில்லை எனில் அதை நான் உங்கள் நண்பர்களுக்கு அனுப்பி விடுவேன்.

முத்து தெரியாத நபரிடம் வீடியோ கால் பேசி, அசிங்க பட்டதை எண்ணி வருந்தினார்.

செய்யக்கூடாதவை:

1. **தெரிந்தவர் அல்லாத மற்றவர்கள் பேஸ்புக் மெசேஜ் அனுப்பினால் அதற்கு பதில் அனுப்ப கூடாது.**
2. **தெரியாத நபர்களுடன் வாட்ஸ்அப் அல்லது மற்ற வீடியோ கால்களில் பேசுவது கூடாது.**

9. கிரிப்டோகரன்சியில் முதலீடு மோசடி
(Investment Through Cryptocurrency)

ஒரு நாள் முத்துவிற்கு டெலிகிராமிலிருந்து அழைப்பு வந்தது.



முத்து தனது டெலிகிராம் அக்கவுண்டிலிருந்து மோசடி செய்பவர் கூறிய குரூப்பில் இணைகிறார்.

செய்ய வேண்டியவை:

1. **கிரிப்டோகரன்சி முதலீடு தொடர்பாக அறியப்படாத எண்களில் இருந்து வரும் அழைப்புகளுக்குப் பதிலளிக்கும்போது எச்சரிக்கையாக இருங்கள்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**





ஒரு மாதம் கழித்து முத்து அந்த வெப்சைட்டை பார்க்கிறார். அது செயலிழந்து விட்டது. டெலிகிராமில் பேசிய நபரையும் தொடர்பு கொள்ள முடியவில்லை. முத்து தன் வாழ்நாள் சேமிப்பு மொத்தத்தையும் இழந்துவிட்டார்.

செய்யக்கூடாதவை:

1. **அரசால் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டு திட்டங்களில் மட்டும் முதலீடு செய்ய வேண்டும். ஆன்லைனில் பழகியவர்களை நம்ப வேண்டாம்.**
2. **கார்டுவிவரங்களையும் OTPயையும் பகிர வேண்டாம்.**

10. வெளிநாட்டிற்கு ஆயில் மற்றும் கொட்டைகள் எற்றுமதி மோசடி (Export Oil and Seeds Fraud))

முத்து தனது வருமானம் போதவில்லை, ஏதாவது பிசினஸ் செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

முத்து தனது இமெயிலை பார்த்துக்கொண்டிருந்தார்.



மோசடி செய்பவர்: நாங்கள் அமெரிக்காவில் விலங்குகளுக்கு தடுப்பூசி தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறோம். எங்களுக்கு முக்கியமான ஹெர்பல் ஆயில் ஒன்று தேவைப்படுகிறது. அது இந்தியாவில் தான் கிடைக்கும். அதை எங்களுக்கு தர மாட்டார்கள். நீங்கள் அதை வாங்கி எங்களுக்கு அனுப்ப வேண்டும். உங்களுக்கு இதில் மூன்று மடங்கு லாபம் கிடைக்கும்.மும்பையில் உள்ள ராஜ் பயோ லேப்ஸ் என்ற கம்பெனியில் தான் அந்த ஆயில் கிடைக்கும். எங்களுக்கு முப்பது லிட்டர் தேவைப்படுகிறது.

செய்ய வேண்டியவை:

1. **ஆன்லைனில் வியாபாரத்திற்காக அணுகும் எவரிடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**



செய்யக்கூடாதவை:

1. **ஹெர்பல் ஆயில், ஹெர்பல் கொட்டைகள் மற்றும் ஆயில்சீட் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று தொடர்பு கொண்டு பேசும் எவரிடமும் பணத்தை கொடுத்து ஏமாற கூடாது.**

11. இணையதள சந்தை மோசடி (Online - OLX Market Scam)

முத்து தன் சோபா செட்டை விற்க விரும்பினார். செகண்ட் ஹேண்ட் பொருட்களின் ஆன்லைன் சந்தை இணையதளத்தில் அவர் விளம்பரத்தை வெளியிட்டார்.

விளம்பரத்தை வெளியிட்ட உடனேயே, சோபா செட்டுக்கு ரூ.15,000/- தருவதாகக் கூறி மோசடி செய்பவரிடமிருந்து போன் வந்தது. முத்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.



மோசடி செய்பவர் முத்துவின் கணக்கிற்கு ரூ.10/-ஐ அனுப்பி, இறுதிக் கட்டணத்தை உறுதிப்படுத்துமாறு கூறினார்.

செய்ய வேண்டியவை:

1. எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள், பணம் செலுத்துவதற்கு மட்டுமே UPI பின் தேவைப்படும், எந்த பணத்தையும் பெற PIN நம்பர் தேவையில்லை.
2. பணம் செலுத்துவதைத் தொடங்கும் முன், UPI பயன்பாட்டில் உள்ள மொபைல் எண்ணை எப்போதும் சரிபார்க்கவும்.
3. இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.

பின்னர் மோசடி செய்பவர் முத்துவிற்கு பணம் செலுத்துவதற்குப் பதிலாக ரூ.14,990/- ஐ முத்து அக்கவுண்டிலிருந்து டெபிட் செய்வதற்கான UPI கோரிக்கையை அனுப்பியுள்ளார்.



முத்து உடனடியாக பின்னை உள்ளிட்டார், அவருடைய கணக்கில் ரூ14,990/- டெபிட் செய்யப்பட்டது.



தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த முத்து, வங்கிக் கிளையை விரைவாக அணுகி அன்றே புகார் பதிவு செய்தார்.



செய்யக்கூடாதவை:

1. OTP அல்லது ரகசிய கணக்கு விவரங்களை அந்நியர்களுடன் பகிர வேண்டாம்.

2.மற்றொரு நபரிடமிருந்து ஒரு தொகையைப் பெற UPI PIN நம்பரை உள்ளிட வேண்டாம்.

12. சிம் ஸ்வாப், சிம் குளோனிங் மோசடி
(Sim Swap, Sim Cloning))

செய்ய வேண்டியவை:

1. தெரியாத அழைப்பாளர்களை நம்புவதற்குப் பதிலாக, சந்தேகம் ஏற்பட்டால், உங்கள் தொலைத்தொடர்பு சேவை நிறுவனத்திடம் சிம் கார்டின் நிலையைச் சரிபார்க்கவும்.
2. இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில்(https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.

முத்து அழைப்பாளரிடம் விவரங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

மோசடி செய்பவர் புதிய சிம்மைப் பயன்படுத்தி முத்துவின் வங்கிப் பயன்பாட்டிற்கான யூசர்நேம் மற்றும் பாஸ்வேர்டை மாற்றி எல்லா பணத்தையும் தனது அக்கவுன்ட்டுற்கு அனுப்புகிறார்.

தன் வங்கி கணக்கிலிருந்து பணம் எடுக்கப் பட்டதை தெரிந்து முத்து தன் தவறை உணர்கிறார்.

செய்யக்கூடாதவை:

1. ஆதார் எண் மற்றும் சிம் எண் போன்ற ரகசிய விவரங்களை தெரியாத அழைப்பாளர்களுடன் பகிர வேண்டாம்.

13. QR குறியீடு ஸ்கேன் மோசடி (QR Code Scam)

முத்து தனது பழைய காரை விற்பனை செய்வதற்காக ஆன்லைன் இணையதளத்தில் பதிவு செய்தார்.

சில மணிநேரங்களில், அவரை ஒரு நபர் (ஒரு மோசடி செய்பவர்) தொடர்பு கொண்டார்.

செய்ய வேண்டியவை:

- **QR குறியீடுகளைப் பயன்படுத்துவதற்கு முன் அவற்றைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.**
- **மோசடி பரிவர்த்தனையைஉடனடியாக உங்கள் வங்கிக்கு தெரிவிக்கவும்.**
- **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

முத்து அவரை நம்பி தனது UPI பின் நம்பரை உள்ளிட்டார். அதன்பிறகு, அவரது கணக்கில் ரூ.70,000 டெபிட் செய்யப்பட்டது குறித்து எஸ்எம்எஸ் வந்தது. அவர் பீதியடைந்தார், அவர் மோசடி செய்பவரை அழைக்க முயன்றார், ஆனால் அதற்குள் அவரது தொலைபேசி சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது.



செய்யக்கூடாதவை:

1. **வேறொருவரிடமிருந்து பணத்தைப் பெற உங்கள் UPI பின் நம்பரை உள்ளிட வேண்டாம். UPI பின் நம்பரானது பணம் அனுப்புவதற்கு மட்டுமே தேவை, பெறுவதற்கு தேவையில்லை.**
2. **எந்தவொரு கட்டணத்தையும் பெற QR குறியீடுகளை ஸ்கேன் செய்ய வேண்டாம். QR குறியீடு பணம் அனுப்புவதற்கு ஸ்கேன் செய்யப்பட வேண்டும், பணம் பெறுவதற்கு அல்ல.**

14. இணையதள வேலை வாய்ப்பு மோசடி
(Online Job Offer Fraud)

முத்து சமீபத்தில் வேலையை இழந்து மிகவும் கவலையாக இருந்தார். ஆன்லைன் ஜாப் போர்டல்களில் வேலை தேட ஆரம்பித்தார். பல்வேறு இணையதளங்களில் தனது ரெஸ்யூமை அப்டேட் செய்துள்ளார்.

ஒரு நாள், XYZ நிறுவனத்தில் இருந்து ஒரு மோசடி நபரிடமிருந்து அவருக்கு அழைப்பு வந்தது.

செய்ய வேண்டியவை:

1. **பணம் செலுத்தும் முன் தொடர்புடைய நிறுவனம் அல்லது ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் நம்பகத்தன்மையை சரிபார்க்கவும்.**
2. **வேலைக்கு எடுக்கும் எந்த நிறுவனமும் எவரையும் பணியமர்த்துவதற்கு கட்டணம் வசூலிப்பதில்லை.**
3. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

பல நாட்கள் காத்திருந்தும் முத்துவிற்கு வேலை கிடைக்கவில்லை. அவர் அந்த எண்ணுக்கு அழைக்க முயன்றார், ஆனால் எண் எப்போதும் அணைக்கப்பட்டு இருந்தது. அவர் நிறுவனத்தின் பெயரை ஆன்லைனில் தேடினார், ஆனால் எதுவும் கிடைக்கவில்லை. கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தில் தான் ஏமாற்றப்பட்டதை முத்து இறுதியில் உணர்ந்தார்.

செய்யக்கூடாதவை:

1. **வேலை என்ற பெயரில் யாருக்கும் பணம் கொடுக்காதீர்கள். ஒரு வேலைவழங்கும் நிறுவனம், வேலை வாய்ப்பிற்காக யாரிடமும் பணம் கேட்காது.**

15. வீடு வாடகைக்கு விடும் வலைதளங்களின் மூலம் மோசடி
(Fraud using House Rent Application)



செய்ய வேண்டியவை:

1. **வீடு வாடகை தொடர்பாக ஆன்லைனில் பார்த்து போனில் மட்டும் பேசுவதாக இருந்தால் அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.**
2. **ஆன்லைனில் பணம் அனுப்புகிறேன் வங்கி கணக்கு விவரங்கள் மற்றும் டெபிட் கார்ட் விவரங்களை கொடுங்கள் என்று கேட்கும்போது கேட்பவரின் உண்மை தன்மையை சரிபார்க்க வேண்டும்.**
3. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**



செய்யக்கூடாதவை:

1. **வங்கி கணக்கு விவரம் மற்றும் OTP யாரிடமும் பகிர கூடாது.**
2. **பணம் செலுத்துவதற்காக உங்கள் கூகுள் ப்ளே ஓபன் பண்ணுங்கள் என்று கூறினால் அவ்வாறு செய்யக்கூடாது.**

17. தீங்கிழைக்கும் செயலியைப் பயன்படுத்தி மோசடி நிறுவனங்களின் இமெயில் சமரசம் மூலம் மோசடி (Business Email Compromise (BEC) Fraud)

ஒருநாள் முத்து வேலை பார்க்கும் நிறுவனத்தினர் ரஷ்யாவில் உள்ள ஒரு கம்பெனியில் மூல பொருள் வாங்குவதற்கு ஆர்டர் செய்தனர்.

இந்த வியாபாரம் தொடர்பான இமெயில்களை ஒரு ஹேக்கர் ஹேக் செய்து கண்காணித்து வருகிறார். அவர் இந்தியாவிலுள்ள முத்துவின் நிறுவனத்திற்கு ரஷ்ய கம்பெனியின் மெயில் ஐடி போலவே ஒரு இமெயில் ஐடியிலிருந்து மெயில் அனுப்புகிறார்.

அந்த இமெயிலில் ஹேக்கர் தங்கள் ரஷ்ய கம்பெனியில் ஆடிட்டிங் நடப்பதாகவும் அதனால் 30,000 டாலர் பணத்தை அமெரிக்காவிலுள்ள தங்கள் வங்கி கணக்கிற்கு அனுப்புமாறு குறிப்பிட்டிருந்தார்.

செய்ய வேண்டியவை:

1. **வெளிநாட்டு கம்பெனிகளுடன் வியாபாரத்தில் ஈடுபடும் நிறுவனங்கள் வேறு ஏதேனும் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்ப சொல்லி இமெயில் வந்தால் அதை சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிறுவனத்திடம் உடனடியாக சரி பார்க்க வேண்டும்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

இதனை நம்பி முத்துவின் கம்பெனியினர் ஹேக்கர் கேட்ட தொகையை அமெரிக்க வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தனர்.

வாகன தயாரிப்பு மூலப் பொருட்கள் முத்துவின் கம்பெனிக்கு வந்து சேரவில்லை. ரஷ்யன் கம்பெனியிடம் விவரம் கேட்ட போது தாங்கள் ஹேக்கரால் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தனர்.

செய்யக்கூடாதவை:

1. **இமெயில் தொடர்பை மட்டும் பார்த்து வேறு வங்கி கணக்கிற்கு பணம் அனுப்ப கூடாது.**

17. பரிசு தருவதாக கூறி மோசடி (Gift Scam)

"பேஸ்புக் மெசேஜில் கிளாரா என்பவர் தான் இலண்டனில் வசிப்பதாகவும், முத்துவிடம் பிரண்டாக விரும்புவதாகவும் மெசேஜ் அனுப்பி இருந்தார். இருவரும் வாட்சாப்பில் பேச தொடங்கினர்

"ஹலோ முத்து, நான் நலம். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?"



முத்துவிற்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு மெசேஜில் ரூபாய் 20 லட்சம் மதிப்புள்ள பொருள் வந்துள்ளது என்ற செய்தியும் வந்திருந்தது. ஆனால் அந்தப் பொருளைப் பெறுவதற்கு ரூபாய் 50,000 கட்ட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

செய்ய வேண்டியவை:

1. **நேரில் அறிமுகமாகாத நபர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

அதன்பிறகு மோசடி நபர் முத்துவை அழைத்து மேலும் ரூபாய் 30,000 அனுப்பவேண்டும் என்று கூறினார்.



முத்துவும் அவர் கேட்க கேட்க பணம் அனுப்பிக் கொண்டே இருந்தார்.

இறுதியில் முத்துவின் கிப்ட் வரவில்லை. பணமும் போய்விட்டது தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தார்."

செய்யக்கூடாதவை:

1. **பேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் பழகி கிப்ட் அனுப்புகிறேன் என்று யாரும் கூறினால் அதனைப் பெறுவதற்கு பணம் எதுவும் அனுப்பக்கூடாது.**

18. திருமண வரன் வலைத்தளம் வாயிலாக மோசடி
(Matrimony Fraud)

முத்து தனது தங்கை திருமணத்திற்காக மேட்ரிமோனி தளத்தில் பதிவு செய்திருந்தார். அதுதொடர்பாக முத்துவிற்கு வெளிநாட்டு எண்ணில் இருந்து அழைப்பு வந்தது.

மோசடிசெய்பவர்: "குட்மார்னிங் முத்து. மேட்ரிமோனி தளத்தில் நீங்கள் உங்கள் தங்கைக்காக வரன் கேட்டு பதில் செய்து இருந்தீர்களே, அதற்காகத்தான் போன் செய்தேன். நான் அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளி டாக்டராக இருக்கிறேன். என் போட்டோவைஅனுப்புகிறேன். உங்கள் தங்கையை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். "

முத்து: மிகவும் நல்ல விஷயம். உங்கள் போட்டோவை அனுப்புங்கள்.

மோசடி செய்பவர்: எனது குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் அனைவரும் இந்தியாவில் உள்ளனர். நான் அவர்களை பார்க்க அடுத்த மாதம் இந்தியா வருவேன். உங்களை அப்போது சந்திக்கிறேன்.

மோசடி செய்பவர் வேறு ஒரு நபரின் போட்டோ மற்றும் வீட்டினை தன் போட்டோ தன் வீடு என மாற்றி அனுப்புகிறார்.

மோசடிசெய்பவர்: நான் இந்தியாவிற்கு வந்து விட்டேன். உங்கள் தங்கையை பார்க்க, விலை உயர்ந்தநகைகள், பொருட்கள் மற்றும் லட்சக்கணக்கில் பணம் கொண்டு வந்துள்ளேன். என்னை கஸ்டம்ஸில் பிடித்து வைத்துள்ளனர்.

செய்ய வேண்டியவை:

1. மேட்ரிமோனிதளங்களில் வரன் தேடும் போது நேரில்பார்த்த பிறகு மேற்கொண்டு தொடர்பில் இருக்க வேண்டும்.
2. வெளிநாட்டில்இருந்து வருவதாக கூறினால்உண்மை தன்மையை சரிபார்க்க வேண்டும்.
3. இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.

முத்து மோசடி நபர் சொன்னவற்றை உண்மை என்று நம்பினார். அவருக்கு உதவி செய்து தன் தங்கைக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என விரும்பினார்.

மோசடிநபர் கஸ்டம்ஸில் இருந்து விடுவிக்க கஸ்டம்ஸ் பீஸ் ரூபாய் 30 ஆயிரத்தை ஒரு வங்கிக்கணக்கிற்கு அனுப்ப சொன்னார்.

மோசடிநபர் கேட்க கேட்க தொடர்ச்சியாக முத்து பணம் அனுப்பினார். பிறகு அந்த நபருக்கு தொடர்பு கொண்டார்.

முத்து வெளிநாட்டு வரன் என்று நம்பி மோசம் போனதை உணர்ந்தார்.





செய்யக்கூடாதவை:

1. **பணம் அனுப்ப சொல்லி மாப்பிள்ளையோ அல்லது கஸ்டம்ஸ் அதிகாரிகள் பேசினால் அனுப்பக்கூடாது.**

19. இணைய வழி பங்கு சந்தை முதலீடு மோசடி
(Online Stock Investment Scam Fraud)



செய்ய வேண்டியவை:

1. **ஸ்டாக் மார்க்கெட்டில் இன்வெஸ்ட் செய்ய சரியான வழிமுறைகளை பின்பற்றவும்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**



செய்யக்கூடாதவை:

1. **தெரியாத நபர்களிடம் வங்கி விவரத்தை மற்றும் டிமேட் அக்கவுண்ட்டை பகிர்தல் கூடாது.**

20. மல்டி-லெவல் மார்க்கெட்டிங் (MLM) மோசடி

முத்துவின் நண்பர் கிருஷ்ணா, நல்ல வருமானம் ஈட்டக்கூடிய ஒரு திட்டத்தைப் பற்றி விளக்குவதற்காக அவரைச் சந்தித்தார்.

செய்ய வேண்டியவை:

1. **இதுபோன்ற திட்டங்களில் உங்களை ஈடுபடுத்த முயற்சிக்கும் நபர்களிடமிருந்து விலகி இருங்கள்.**
2. **மல்டி லெவல் மார்க்கெட்டிங் திட்டத்தின் நம்பகத்தன்மையை சரிபார்க்கவும். பொன்சி திட்டம், பிரமிட் திட்டம் போன்ற சில நெட்வொர்க் மார்க்கெட்டிங் திட்டங்கள் இந்தியாவில் நேரடி விற்பனை வழிகாட்டுதல்கள், 2016 மற்றும் பரிசு சீட்டுகள் மற்றும் பணச் சுழற்சி திட்டங்கள் (தடை) சட்டம், 1978 ஆகியவற்றின் கீழ் சட்டவிரோதமானவை.**
3. **அத்தகைய திட்டத்தை முன்மொழிபவர் உங்கள் நண்பர் அல்லது உறவினராக இருந்தாலும், வேண்டாம் என்று உறுதியாக சொல்லுங்கள்.**
4. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

முத்து உடனடியாக படிவத்தை பூர்த்தி செய்து, மல்டி-லெவல் மார்க்கெட்டிங் நிறுவனத்தின் நேரடி விற்பனை முகவராக ஆக ஒப்புக்கொண்டார்.

நிறுவன பொருட்களின் விற்பனை மோசமாக இருந்தது. மேலும் முத்துவால் தனக்கு கீழ் 3 பேரை சேர்க்க இயலவில்லை. நிறுவனத்திடமிருந்து வாங்கிய பொருளையும் அவரால் யாரிடமும் விற்க முடியவில்லை. ரூ. 20,000த்தை முத்து இழந்தார்.

செய்யக்கூடாதவை:

1. **தெரியாத நிறுவனங்களுக்கு பணம் செலுத்தி, தெரியாத திட்டங்களில் பதிவு செய்ய வேண்டாம்.**

21. சமூக ஊடகங்கள் மூலம் ஆள்மாறாட்டம் மோசடி
(Impersonation Through Social Media)



விரைவில் முத்து சமூக ஊடகங்களை பயன்படுத்தப் பழகினார், படங்களை போஸ்ட் போடுவது, லைக் செய்வது ப்ரெண்டு ரெக்வஸ்ட் தருதல் மெசேஜ் அனுப்புதல் ஆகியவற்றை செய்ய தொடங்கினார்.

ஒரு நாள், முத்துவின் நண்பரான ராமு, மருத்துவ அவசர தேவைக்காக ரூ. 10,000 கேட்டு அவருக்கு பேஸ்புக்கில் செய்தி அனுப்பினார். பகிரப்பட்ட கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி முத்து உடனடியாக ராமுவிற்கு பணம் அனுப்பினார்.



செய்ய வேண்டியவை:

1. **பணம் செலுத்தும் முன் உண்மையான நபருக்கு போன் செய்து சரிபார்த்து கொள்ளவும்.**
2. **பணம் செலுத்தும் முன் எப்போதும் வங்கி கணக்கு விவரங்களைச் சரிபார்க்கவும்.**
3. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

செய்யக்கூடாதவை:

1. **சமூக வலைதளங்களில் உங்கள் மொபைல் எண், மின்னஞ்சல் ஐடி மற்றும் ப்ரெண்ட் லிஸ்ட், போட்டோ போன்ற உங்களின் தனிப்பட்ட தகவல்களை அனைவரும் பார்க்கும்படி வைக்க வேண்டாம் .**
2. **நீங்கள் நேரில் சந்தித்திராத நபர்களின் நட்புக் கோரிக்கைகளை ஏற்காதீர்கள்.**

22. இணையதள லாட்டரி மோசடி (Online Lottery Fraud)

முத்துவிற்கு ஏபிசி ஜாக்பாட் கிடைத்ததாக ஆடியோ செய்தி வந்தது.

உற்சாகமாக, முத்து ஜாக்பாட் செய்தியில் உள்ள எண்ணுக்கு அழைத்தார், அதில் ஒரு சூப்பர் ஸ்டார், முத்துவின் பரிசுக்கு வாழ்த்து தெரிவித்ததாக ஒரு போலி ஆடியோ இடம்பெற்றிருந்தது. கொடுக்கப்பட்ட எண்ணில் தொடர்பு கொண்டார்.

இந்த மோசடி நடவடிக்கையை அறியாத முத்து, பணத்தை செலுத்தி அவரை திரும்ப அழைத்துள்ளார்.

செய்ய வேண்டியவை:

1. **தெரியாத எண்களில் இருந்து பெறப்பட்ட செய்தியை நம்புவதற்கு முன் சரிபார்க்கவும்.**
2. **இதுபோன்ற நிகழ்வுகளின் அதிகாரப்பூர்வ இணையதளங்களில் லாட்டரி சலுகைகளை சரிபார்க்கவும்.**
3. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

இரண்டு முறை யோசிக்காமல், முத்து பணம் செலுத்துகிறார்.



பின்னர், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தார்.

செய்யக்கூடாதவை:

1. **மிக அதிக வருமானத்தை எதிர்பார்த்து, முன்பின் தெரியாதவருக்கு பணம் செலுத்த வேண்டாம்.**

23. வெளிநாட்டு தொண்டு நிறுவன நிதி வழங்கல் தொடர்பான மோசடி

முத்து, வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களை அரசு கண்காணிக்கிறது என்ற செய்தியை பார்த்தார்.



செய்ய வேண்டியவை:

1. **எப்பொழுதும் விழிப்புடன் இருங்கள், ஏனென்றால் போலி இணையதளம், நன்கொடைகளை எங்கு அனுப்புவது என்ற விவரங்களை மட்டும் மாற்றி, உண்மையான தொண்டு தளத்தைப் போலவே தோற்றமளிக்கும் நபர்கள் உங்களை தொடர்பு கொள்ளலாம்.**
2. **மோசடி செய்பவர்கள் பெரும்பாலும் அவசரத்தை வலியுறுத்துவது மற்றும் உணர்ச்சிகரமான மொழியைப் பயன்படுத்துவது போன்ற தந்திரங்களைப் பயன்படுத்துகின்றனர். அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும்.**
3. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

"என்ன உதவி சார்? நான் என்ன செய்ய வேண்டும்?

எங்கள் நிறுவனத்தை அரசு கண்காணிக்கிறது நாங்கள் எங்கள் பணத்தை உங்களுக்கு அனுப்புகிறோம் அதன்பிறகு அதை இந்தியாவிலுள்ள ஏழைகளுக்கு நீங்கள் கொடுத்து விடுங்கள்.

ஓ, செய்து விடுகிறேன்.

உங்கள் அக்கவுண்ட் நம்பரை அனுப்புங்கள். இந்த மொத்த தொகையும் சுமார் 7 கோடி இருக்கும். அதை உங்கள் அக்கவுண்டிற்கு மாற்ற அதில் 1% தொகையை (7 இலட்சத்தை) எங்கள் நிறுவனத்தின் அக்கவுண்டிற்கு டெப்பாசிட் செய்யுங்கள். மொத்த தொகையும் கைமாறிய பிறகு உங்கள் டெப்பாசிட் பணத்தை நாங்கள் திருப்பி தந்து விடுவோம்.

"சரி சார். நான் 7 லட்சத்தை உடனே அனுப்புகிறேன். உங்கள் வங்கி கணக்கு விவரங்களைப் பகிரவும்."

முத்து 7 லட்சத்தை அனுப்பினார். ஆனால் அவருக்கு 7 கோடி கிடைக்கவில்லை, தொண்டு நிறுவனம் என்ற பெயரில் மோசடி செய்பவர்களால் தான் ஏமாற்றப்பட்டதை முத்து உணர்ந்தார்.

செய்யக்கூடாதவை:

1. **உண்மைத்தன்மையை சரிபார்க்காமல் பணத்தை முன்கூட்டியே யாருக்கும் அனுப்ப வேண்டாம்.**

24. கடன் அட்டை வரம்பு மேம்படுத்துதல் மோசடி
(Credit limit upgradation Fraud)

ஒரு நாள், முத்துவிற்கு ஒரு அழைப்பு வந்தது.

செய்ய வேண்டியவை:

1. **வங்கி பரிவர்த்தனைகளைத் தடுக்க, கார்டு/கணக்கு/UPI சேவையைத் தடுக்க உடனடியாக வங்கியை அழைக்கவும்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

சிறிதுநேரம் கழித்து, முத்து கிரெடிட் கார்டில் ரூ.70,000 டெபிட்செய்ததாக அவரது வங்கியிலிருந்து எஸ்எம்எஸ் வந்தது. அவர் மோசடிசெய்பவரால் ஏமாற்றப்பட்டார்.

செய்யக்கூடாதவை:

1. **கிரெடிட்கார்டு ஆக்டிவேசன்/லிமிட்அதிகரித்தலுக்கு தெரியாத எண்ணிலிருந்து வரும் அழைப்புகளை நம்ப கூடாது.**
2. **உங்கள்கார்டு விவரங்கள்/OTP-ஐ யாருடனும் பகிர வேண்டாம்.**

25. பணம் திரும்ப பெறும் கேஷ்பேக் சலுகை மோசடி
(Online Fraud Using Cashback Offers)

முத்து இணையத்தில் மிகவும் ஆர்வமாக இருப்பதோடு, ஈ-காமர்ஸ் இணையதளங்கள் தங்கள் தயாரிப்புகளுக்கு கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்குவதால், எப்போதும் ஆன்லைன் ஷாப்பிங்கை விரும்புவார்.

செய்ய வேண்டியவை:

1. **நிதிஇழப்பைத் தடுக்க உங்கள் வங்கி கிளைக்கு தெரிவித்து பரிவர்த்தனையை தடுக்கவும்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

(முத்து தனது UPI பின்னை உள்ளிட்ட பிறகு, அவரது கணக்கில் இருந்து ரூ.20,000/- பணம்எடுக்கப்பட்டது. முத்து ஏமாற்றப்பட்டார்.)

செய்யக்கூடாதவை:

1. **போன் செய்பவரைகண்மூடித்தனமாகநம்ப வேண்டாம்: சலுகையின் நம்பகத்தன்மையைச் சரிபார்க்க, நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தைச் சரிபார்க்க வேண்டும்.**
2. **பணம்செலுத்துவதற்குமட்டுமே UPI பின்னை உள்ளிட வேண்டும். பணம் பெறுவதற்கு அல்ல.**

26. சமூக வலைதளங்களில் வதந்திகளை பரப்புதல்
(Spreading false news in social media)

வணக்கம் முத்து. நான் வேலு பேசுகிறேன் இப்பொழுதுதான் ஒரு மெசேஜ் பார்த்தேன். வடநாட்டில் இருந்து ஒரு கும்பல் சிறையில் இருந்து வெளியே வந்திருக்காம். அவங்க வீட்டிற்கு வெளியில் விளையாடும் பிள்ளைகளை கடத்திட்டு போகிறார்களாம். அவங்க நம்ம ஊருக்கு வந்தா குழந்தைகளுக்கு ஆபத்து.

"ஓ! அப்படியா நான் உடனே இதை எல்லாருக்கும் சொல்லி விடுறேன்."

"இன்னும் கேளுங்க முத்து.. ஒரு அமைப்பைச் சேர்ந்தவர்கள், எச்ஐவி நோயாளிகள் பயன்படுத்திய ஊசியை எடுத்துட்டு வந்து, ஊருல இருக்குற மத்தவங்களுக்கு போட்டு விடுகிறார்களாம். இதனால் எல்லாருக்கும் எய்ட்ஸ் பரவுகிறது. இதையும் சோசியல் மீடியால எல்லாருக்கும் அனுப்பிடுங்க."

உடனே இப்பொழுது எல்லாருக்கும் மெசேஜ் அனுப்பி விடுகிறேன்.

செய்ய வேண்டியவை:

1. **ஒரு தகவலில் உண்மைதன்மையை சரிபார்க்க வேண்டும்.**
2. **உண்மை தன்மை இல்லாத செய்திகளை பரப்புவோர் பற்றி அருகில் உள்ள சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும்.**
3. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

" முத்து, நான் சைபர் கிரைம் போலீஸ் பேசுகிறேன். நீங்கள் தவறான தகவல்களை வதந்தியை மக்களிடையே பரப்புகிறீர்கள். இது சட்டப்படி குற்றம்."

சார் எனக்கு எதுவும் தெரியாது. என் நண்பர் வேலு தான் என்னிடம் சொன்னார். அது பொய்யான தகவல் என்று எனக்கு தெரியாது.

"முத்து தனது தவறினை உணர்ந்தார். இதனால், தான் சிறைக்கு செல்ல போவதை எண்ணி வருந்தினார்."

சமூக வலைதளங்களில் கருத்துக்களை பரப்பும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தங்களுக்கு தெரியாத ஒன்றை பரப்புதல் தவறு.

செய்யக்கூடாதவை:

1. **தவறான தகவல்களை சமூக வலைதளங்களில் பரப்பக் கூடாது.**

27. தரசு திருட்டு (Data Theft)

முத்து வேலை பார்க்கும் நிறுவனத்தில் வாடிக்கையாளர் விவரங்கள் மற்றும் வாகன தயாரிப்பு தொடர்பான குறிப்பிட்ட மாடல்களையும் ரகசியமாக வைத்திருந்தனர்.

அந்த நிறுவனத்தில் கம்ப்யூட்டர் மேனேஜராக இருக்கும் சுரேஷிற்கு அந்த ரகசிய தகவல்களை வேறு நிறுவனத்திற்கு மாற்றினால் பணம் பெறலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது.

சுரேஷ் தான் வேலை பார்க்கும் நிறுவனத்தின் போட்டி கம்பெனிக்கு போன் செய்து தன்னிடமுள்ள ரகசிய தகவல்களை தர தயார்என்று கூறினார்.

செய்ய வேண்டியவை:

1. **நிறுவனங்கள் தங்கள் ஊழியர்கள் ஏதேனும் தகவல் திருட்டில் ஈடுபடுகிறார்களா என்று பல்வேறு வழிமுறைகளில் கண் காணிக்க வேண்டும்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

நீங்கள் எதிர்பார்க்கும் தொகையை நாங்கள் கொடுத்து விடுகிறோம். அந்த தகவல்களை உடனே எங்களை மெயிலுக்கு அனுப்புங்கள்.

போட்டி நிறுவனம் ரூபாய் 10 லட்சத்தை சுரேஷ் வங்கி கணக்கிற்கு அனுப்பியது.

வாடிக்கையாளர் விவரங்கள் வேறு கம்பெனிக்கு போனது தொடர்பாக போலீஸ் விசாரணை செய்து சுரேஷ் தான் தகவல்களை திருடியது என்று கண்டு பிடிக்கின்றனர்.

சுரேஷின் நிறுவனம் அவரை வேலையில் இருந்து நீக்கியது.

போலீசார் சுரேஷ் பேங்க் அக்கவுண்ட்டை முடக்கினர். அவரால் அந்த 10 லட்சத்தை எடுக்க முடியவில்லை. வேலையும் போய் அவர் மேல் FIR போடப்பட்டது.

செய்யக்கூடாதவை:

1. **கம்பெனி விதிமுறைகளை மீறி கம்பெனியில் இருந்து ஏதேனும் தகவலை எடுத்து சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்தக் கூடாது.**

28. தேடுபொறிகளில் தகவல்களை மாற்றியமைத்து மோசடி
(Frauds by compromising credentials through search engines)

முத்து கிரிக்கெட் பார்ப்பதில் ஆர்வம் கொண்டவர், வரவிருக்கும் கிரிக்கெட் போட்டியைப் பற்றி அவர் மிகவும் உற்சாகமாக இருந்தார். ஆனால் அவர் ஸ்போர்ட்ஸ் செயலியைத் திறந்தவுடன் தனது சந்தா காலாவதியாகிவிட்டதை உணர்ந்து, ரீசார்ஜ் செய்கிறார். பணம் டெபிட் ஆகிவிட்டது ரீசார்ஜ் நடக்கவில்லை.

முத்து இணையத்தில் கஸ்டமர்கேர் நம்பரை தேடுகிறார் முத்து சிறிது நேரம் தேடியதில் அதற்கான போன் நம்பர் கிடைத்தது. உடனே அந்த எண்ணை டயல் செய்தார் முத்து.

செய்ய வேண்டியவை:

1. **எப்போதும் தொடர்பு விவரங்கள்/வாடிக்கையாளர் சேவை எண் போன்றவற்றை அந்த வங்கி அல்லது தொடர்புடைய அதிகாரப்பூர்வ இணையதளத்தில் இருந்து மட்டுமே பெறவும்.**
2. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**



முத்து லிங்கை கிளிக் செய்தார்.

முத்துவின் கணக்கில் இருந்து ரூ.40,000 டெபிட் ஆனதாக எஸ்எம்எஸ் வந்தது.

ஸ்போர்ட்ஸ் செயலிக்கு 1000 ரூபாய் செலுத்துவதில் பிரச்சினை என்று தவறான நபருக்கு போன் செய்து, முத்து மோசடி செய்பவருக்கு 40000 ரூபாய் பரிமாற்றம் செய்து முடித்தார்.

செய்யக்கூடாதவை:

1. **இணைய தேடுபொறிகளில் (Search Engine) இருந்து பெறப்பட்ட நார்மல் பத்து இலக்க தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ள வேண்டாம்.**

29. அங்கீகரிக்கப்படாத கடன் செயலிகள் (Unauthorized Loan Application)

முத்துவும் ராமுவும் சிறந்த நண்பர்கள். ஒரு நாள், முத்து ராமுவைச் சந்தித்து தனது பொருளாதாரப் பிரச்சனைகளைப் பற்றிக் கூறினான்.





கடனை வழங்கும் நிறுவனம் பதிவுசெய்யப்பட்டதா என்பதைச் சரிபார்க்காமலேயே முத்து மொபைல் செயலியைப் பதிவிறக்குகிறார். அவருக்கு ரூ. 5000/- அவரதுவங்கிக் கணக்கில் சிறிது வந்து சேர்ந்தது.

செய்ய வேண்டியவை:

1. **எந்தவொரு செயலியையும் பதிவிறக்கம் செய்து, உங்கள் மொபைல் ஃபோனில் இருந்து தரவுகளை அணுகுவதற்கு ஆப்ஸ் அனுமதியை வழங்கும் போது கவனமாக இருக்கவும்.**
2. **https://www.rbi.org.in/Scripts/BS_NBFCList.aspx இல் NBFC இலிருந்து கடனைப் பெறுவதற்கு முன், கடன் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வழங்குவதற்கு விண்ணப்பம் பயன்படுத்தப்படும் நிறுவனம்/NBFCல் பதியப்பட்டுள்ளதா என்று எப்போதும் சரிபார்க்கவும்.**
3. **இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.**

7 நாட்களுக்குள், ரூ. 7500/-ஐ திருப்பி செலுத்துமாறு முத்துவிற்கு அழைப்பு வந்தது. முத்து இன்னும் பழைய கடனையே திரும்பி செலுத்தவில்லை. மேலும் ரூ.7500 செலுத்த வேண்டும்என்று கேட்டு முத்து அதிர்ச்சியடைந்தார். தனது இன்னொரு நண்பரான வேலுவிற்கு அழைத்தார்.



"குறைவான வட்டிக் கட்டணங்களுடன் எனது கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தேன், ஆனால் இந்த ஆப்ஸ்அதிக வட்டி மற்றும் பல கட்டணங்களைவசூலிக்கிறது. இப்போது நான் என்ன செய்யவேண்டும்?"

நிறுவனம் RBI இல் பதிவு செய்யப்பட்டுள்ளதா அல்லது வேறு ஏதேனும் பதிவு உள்ளதா என்பதை நீங்கள் சரிபார்த்தீர்களா? இல்லையெனில், அவர்கள் எந்த விதிகளின் கீழும் வர மாட்டார்கள், மேலும் நீங்கள் ஒப்பந்தத்தின்படியே முழு பணத்தையும் செலுத்த வேண்டியிருக்கும். நிதி நிறுவனம் (NBFC) RBI ஆல் பதிவு செய்யப்பட்டதா/உரிமம் பெற்றதா என்பதை எப்போதும் சரிபார்க்கவும்.



செய்யக்கூடாதவை:

1. **எந்த ஒரு ஆவணமோ மற்றும் கிரெடிட் ஸ்கோரை சரிபார்க்காமல், ஏதாவது ஒரு மொபைல் ஆப்ஸும் விரைவான கடனை வழங்கினால், கவனமாக இருங்கள் அவர்களிடம் கடன் வாங்காதீர்கள்.**
2. **அதிக வட்டி குறிப்பிட்டியிருந்தால் கடன் வாங்காதீர்கள்.**

30. தவறான குறியிடு மூலம் வியாபார கடைகளில் மோசடி (Payment Spoofing Applications)

செய்ய வேண்டியவை:

1. கடை உரிமையாளர்கள் தனது கடையில் QR கோடு மூலம் நடைபெறும் பண பரிவர்த்தனைகள் தனது வங்கிக் கணக்கிற்கு உடனடியாக வருகிறதா என்று சரிபார்க்க வேண்டும்.
2. இந்த சம்பவத்தை அருகிலுள்ள சைபர் கிரைம் காவல் நிலையம் மற்றும் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் (https://cybercrime.gov.in) புகாரளிக்கவும் அல்லது 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு அழைக்கவும்.



பொருள் வாங்க வந்த நபர், தான் கொண்டுவந்த QR கோடு அட்டையை முத்துவின் கடையில் வைத்து விட்டு முத்துவின் QR கோடு அட்டையை எடுத்து சென்றுவிட்டார். மேலும் பணம் செலுத்தி விட்டதாக பொய்யான தகவலை முத்துவிடம் காண்பித்துவிட்டு விரைவில் அங்கிருந்து கிளம்பிவிட்டார்.

முத்து ஸ்க்ரீன் ஷாட்டை பார்த்து நம்பி விட்டார்.

முத்து அன்றைய வியாபாரத்தை முடித்து விட்டு தனது வங்கி கணக்கில் இருந்த பணத்தை பார்த்தபோது UPI மூலமாக QR கோடு ஸ்கேன் செய்து பணம் செலுத்தியவர்கள் அனைவரது பணமும் தன் வங்கி கணக்கிற்கு வராததை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.



மோசடி நபர் தனது UPI பேமெண்ட் கார்டை மாற்றி மோசடி நபரின் கார்டை வைத்து விட்டு சென்றது தெரியவந்தது. மோசடி நபரிடம் ஏமாந்து போனதை முத்து உணர்ந்தார்.

செய்யக்கூடாதவை:

1. **பணத்தை அனுப்பி விட்டேன் என்று வாய்மொழியில் கூறினாலோ அல்லது தவறான ஸ்கிரீன்ஷாட் கொடுத்தாலோ அதை சரி பார்க்காமல் அவர்களை கடையை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது.**

GREATER CHENNAI POLICE
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU

சென்னை பெருநகர காவல்துறை

சைபர் கிரைம் குறித்த புகார்களுக்கு

அழையுங்கள்

1930

கட்டணமில்லா தொலைபேசி எண்.

பதிவு செய்யுங்கள்: www cybercrime.gov.in